[3rd November 1966

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: (அ) 790 அடி.

(இ) இத்திட்டத்திற்காக 31-3-1966 வரை 129 லட்சம் ரூபாய் செலவாயிற்று.

'டாக்சி' கட்டணம்

* 356 கேள்வி.—திரு. கரு. சீமைச்சாமி: திரு. எஸ். ஜே. ராமசாமி: } கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) சென்னை நகரில் மூன்று சக்கர டாக்சிகள் விடுவதற்கான அனுமதி தர அரசாங்கத்திற்கு உத்தேசமுண்டா?

(இ) ஆம் என்றால் எப்பொழுது அமல் நடத்தப்படும்?

(உ) அதற்குக் கட்டணம், இப்போதுள்ள பேபி டாக்சியின் கட்டணம்போல் நிர்ணயிக்கப்படுமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: (அ) முதல் (உ) வரை: சென்னை நகரில் மூன்று சக்கர டாக்சிகளை விடும் செயற் குறிப்பு ஒன்று அரசாங்கத்திடம் வந்துள்ளது. இது பரிசீலனையில் உள்ளது.

* 357 Q.—SRI V. SANKARAN: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether there is any proposal to increase the rates of fares for baby and medium taxis in the State; and

(b) if so, the details thereof?

THE HON. SRI R. VENKATARAMAN: (a) & (b) The rates of fares for baby taxis and medium taxis have been fixed with effect from 1st October 1966 as follows:—

(i) for each kilometre—40 Paise.

(ii) Minimum charge for a distance of $1\frac{3}{4}$ kilometres—70 Paise.

(iii) Waiting charges—10 Paise for every five minutes in waiting.

திரு. வை. சங்கரன்: சார், இந்தக் கட்டண உயர்வை உத்தேசித்தாவது, பொதுமக்களுடைய நலனைக் கருதி, நான்கு பேர்கள் போகலாம் என்று அவர்களுக்கு பிரயாணத்திற்கு ஓரளவு வசதி செய்து கொடுக்கும் வகையில் ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: இன்றைக்கு பேபி டாக்சி என்பதில் சாதாரணமாக 'ஸ்டாண்டர்ட்' 'ஹெரால்ட்', 'ஃபியட்' போன்றவைகள்தான் இருக்கின்றன. அவற்றில் ட்ரைவரைத் தவிர நான்கு பேர்கள் உட்காரக் கஷ்டமாக இருக்கும். 'அம்பாஸிடார்'-ல் ட்ரைவரைத் தவிர நான்கு பேர்கள் உட்காரலாம் என்றிருக்கிறது.

3rd November 1966]

திரு. வை. சங்கரன் : ஆனால், இன்றைக்கு பேபி, மீடியம் டாக்ஸிகளுக்கு ஒரே அளவு சார்ஜாக இருப்பது போல் இருக்கிறது. பொது மக்கள் கஷ்டப்பட்டுக் கொண்டு போகத்தயாராக இருக்கும்போது, சர்க்கார் அதைப் பற்றிக் கவலைப்படாமல், பொது மக்கள் விரும்பினால் நான்கு பேர்கள் போகலாம் என்று சொல்வதில் என்ன கஷ்டம் இருக்கிறது என்பது தெரியவில்லை. பொதுமக்கள் கஷ்டத்தைப் பொறுத்துக்கொள்ள விரும்பும்போது, அதை அனுமதிக்க சர்க்கார் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : கனம் அங்கத்தினர் பொது மக்கள் பத்துப் பேர்கள் உட்காருகிறோம் என்றால் கூட அனுமதி கொடுக்க வேண்டும் என்கிறார்களா என்று தெரியவில்லை. இது பொதுமக்கள் பிரச்சினை இல்லை. எவ்வளவு பேர்கள், ட்ரைவரைத் தவிர உட்காரலாம், அதனால் ட்ரைவருக்கு கஷ்டம் இல்லாமல், ஆக்ஸிடெண்டுகள் ஏற்படாமல் இருக்கும் என்பதையெல்லாம் பார்த்துச் செய்யப்படுகிறது.

திரு. எம். எஸ். செல்வராஜன் : தலைவர் அவர்களே, மாற்றி அமைக்கப்பட்ட புதிய விகிதப்படி மீட்டர்களை மாற்றி அமைக்க, இவ்வளவு காலத்திற்குள்ளாகச் செய்யவேண்டும் என்று திட்டம் போட்டு செய்யப் படுகிறதா என்று அறியலாமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : படிப்படியாக மாற்றி அமைக்கப் படவேண்டும். ட்ரைவர்களிடம் 'கன்வர்ஷன் ரேட் கார்டுகள்' இருக்கின்றன. அதன்படி சரியான கட்டணத்தைத் தெரிந்துகொள்ளலாம்.

திரு. கரு. சீமைச்சாமி : சார், இந்தக் கட்டண உயர்வுக்குப் பிறகு, டாக்ஸிகளில் மக்கள் அதிகமாக ஏறுவதில்லை என்று ஏதாவது தகவல் வந்து இருக்கிறதா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அவ்வாறு வரவில்லை.

திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, இப்பொழுது ஏற்றிய கட்டணம் பொதுமக்களுக்கு அதிக பாதகமாக இருக்கிறது என்று ரெப்ரசென்டேஷன் வந்ததா ? அது பரிசீலிக்கப் பட்டதா ? என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : ஏற்றுவதற்கு முன்னால், சர்க்கார் விதிகள்படி, ஒரு மாதத் தவணைகொடுத்துத்தான் செய்யப் பட்டது. கட்டணம் போதாது என்கிற ரெப்ரசென்டேஷன் தான் வந்தது. அதிகம் என்று ரெப்ரசென்டேஷன் வரவேயில்லை.

திரு. எஸ். ஜே. ராமசாமி : ஒரு நபரை அதிகமாக ஏற்றுவதற்குத் தயங்குகிறார்களே. அமைச்சர் அவர்கள் சென்றுவந்த சோஷலிச நாடுகளில் மக்களுடைய தேவைகளைப் பார்த்துச் செய்யவில்லையா என்று அறியவிரும்புகிறேன். மனிதனுடைய உரிமைக்கு இடம் கொடுப்பதில்லையா ?

கனம் சபாநாயகர் : 'மனித உரிமை' என்றால், அடுத்தவன் உரிமையும் பாதிக்கப்படக் கூடாது இல்லையா ?

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : தலைவரவர்களே, டாக்ஸிகளிலே, எல்லா கார்களிலும் ஒரே விதமாக, நிரந்தரமாக மீட்டர் இருப்பதாகத் தெரியவில்லை. காரணம், சட்ட சபை ஹாஸ்டலிலிருந்து இங்கே வருவதற்கு சில கார்களில் உள்ள மீட்டர் ஒரு ரூபாய் காட்டுகிறது, வேறு சில கார்களில் உள்ளது 90 காசு 80 காசு என்று காட்டுகிறது. அது மீட்டரில் கோளாரா அல்லது டாக்ஸியில் கோளாரா, அதற்கு என்ன விளக்கம் என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : ஒரு வேளை டாக்ஸி ஓட்டுகிறவர்களுடைய கோளாராக இருக்கலாமோ என்னவோ. அப்படித் தவறு இருந்தால், போலீசாருக்கு உடனே அறிவித்தால், மீட்டரை செக் செய்ய ஏற்பாடு இருக்கிறது

திரு. வை. சங்கரன் : இந்தக் கட்டண உயர்விற்குப் பின் பொது மக்கள் இவற்றில் ஏறுவதற்குத் தயங்குகிறார்கள் ; ட்ரைவர்களுக்கு பத்து பைசா பதினைந்து பைசா என்று கொடுத்ததுகூட இப்பொழுது இல்லை, டாக்ஸி ஓனர்களுக்கும் அதிகமாக வருமானம் இல்லை என்கிறார்கள். ஆகவே, இந்த மூன்று பிரிவுக்காரர்களுடைய அபிப்பிராயங்களையும் கேட்டுத் தெரிந்து கொண்டு இன்னும் ஒரு மாதம் இரண்டு மாதங்களுக்குப் பிறகாவது, இதை மறு பரிசீலனை செய்ய ஏதாவது ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அந்த விதமான உத்தேசம் இல்லை.

SRI C. CHIRANJEEVULU NAIDU : Sir, may I know on what basis the revision of fares has been permitted? Has the proposal been made by the Taxi-Owners' Association or the Government themselves have examined the matter and revised the fares?

THE HON. SRI R. VENKATARAMAN : The increased cost of operation, the higher cost of vehicles and the increased maintenance charges were taken into account before revising the fares. The Government have felt that the number of taxis are not increasing in the Madras City, in spite of the fact that they have given completely a free licence for anybody to run the taxis, because the rates were uneconomical. It is on these considerations that the rates have been revised.

திரு. டி. சார்ச்சா கவுடர் : உதகைக்கு வெளிநாடுகளிலிருந்தும் வெளி மாநிலங்களிலிருந்தும் யாத்திரிகர்கள் வருகிறார்கள். டாக்ஸிகளில் ட்ரைவர்கள் அதிகமாகக் கட்டணம் வசூலிக்கிறார்கள் என்கிற புகார் வந்திருக்கிறதா ? அப்படி இருந்தால், அந்த இடத்தில் சர்க்காரே 10, 15 டாக்ஸிகளை ரீஸ்ட் ஹோமில் வைத்து நடத்த ஏற்பாடு செய்யப்படுமா ?

3rd November 1966]

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: அரசாங்கம் டாக்ஸி நடத்துவதாக உத்தேசம் இல்லை. நீலகிரி சம்பந்தப்பட்டவரையில், அங்கே மீட்டர் வைத்தால், 'ஒன் வே ட்ராபிக்' என்று ஆகிவிடுவதால், கட்டுபடியாகவில்லை என்று சொன்னார்கள். ஆகவே, மீட்டரைவைத்து நிர்ப்பந்தத்தை உண்டாக்கவில்லை. பொது மக்களும், அங்கே உள்ள ஓனர்களும், ட்ரைவர்களும், எல்லோரும் வந்து முறையீடு செய்ததன் பேரில் இவ்வாறு செய்யப்பட்டிருக்கிறது.

திருமதி ராஜாத்தி குஞ்சிதபாதம்: தலைவர் அவர்களே, கட்டண உயர்வு இருக்கும் நிலையில், அதிகம் பேர்கள் டாக்ஸிகளில் ஏறுவதில்லை என்று தெரிகிறது. இப்பொழுது மூன்றுவது பேருக்கு மேல் அனுமதிக்கவில்லை என்பதால், 'ஆட்டோ ரிக்ஷாக்களை' அதிகமாக்கி, அவை பயன்படும் அளவில் நடவடிக்கை எடுப்பார்களா? என்று அறியவிரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: தனியாக ஒரு கேள்வி போட்டால், ஆட்டோ ரிக்ஷா பற்றி விதிகள் என்ன என்று பார்த்து பதில் சொல்லலாம்.

மோட்டார் வாகன சட்டம்

* 358 கேள்வி.—திரு. சி. கோதண்டராம பாகவதர்: கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

போக்குவரத்து அலுவலகங்களில் வேலைப் பளுவை குறைக்கும் வகையில் பஸ்களுக்கும் (Buses) லாரிகளுக்கும் (Public Carriers) விதிக்கப்படும் காலாண்டு வரியையும் (Quarterly Tax) சர்சார்ஜ் (Surcharge)-யும் ஒன்றாக இணைத்து (Clubbing) கஜானாவிலோ அல்லது போக்குவரத்து அலுவலகங்களிலோ செலுத்தும்வகையில் மோட்டார் வாகன சட்டத்தை திருத்தும் உத்தேசம் உண்டா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: இச் செயற்குறிப்பு பரிசீலனையில் உள்ளது.

Technical teaching staff

* 359 *Q.*—Sri M. S. SELVARAJAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether it is a fact that the Non-technical temporary teaching staff in Government Polytechnics are not given increments while the technical temporary teaching staff are given the same;

(*b*) if so, whether there is any proposal to extend the same privilege to the non-technical teaching staff; and

(*c*) the number of teaching staff both technical and non-technical whose services have not been regularised?

The Hon. Sri R. VENKATARAMAN : (*a*) Yes.

(*b*) The matter is being examined.

(*c*) Technical 85 and Non-Technical 19.